## டிச.20, 21 — நெல்லை மாவட்டத்தில் இரண்டு நாட்கள் சுற்றுப் பயணம்!

# ‘பொருநை’ அருங்காட்சியகம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## 44,924 பயனாளிகளுக்கு — 101 கோடி ரூபாய் மதிப்பில் —

## அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்! அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

நெல்லை, டிச.17-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லையில் 2 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்து 538 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப்பணிகளை துவக்கி 44,924 பயனாளிகளுக்கு 100 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார் என நெல்லையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.**

திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லையில் வரும் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ரூபாய் 67.25 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகம் மற்றும் புதிய திட்டங்கள்,முடிவுற்ற திட்டப்பணி களை துவக்கி வைக்கிறார்கள்.

நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மைதானத்தில் அரசு விழாவிற்கான பிரமாண்ட மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இந்தப் பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன் கான், முன்னாள் எம்.பி. ஞான திரவியம், மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே. ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனைத் தொடர்ந்து புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனை கூடுதல் கட்டிடம்,பொருநை அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார்கள்.



பின்னர் அரசு விழா குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனையும் மேற்கொண்டனர்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

திராவிட மாடல் முதல்வர் அவர்கள் வருகிற 20-12-2025 மற்றும் 21-12-2025 ஆகிய இரண்டு நாட்கள் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்கள்.

20-ஆம் தேதி சனிக்கிழமை மதியம் வரும் முதலமைச்சர் அவர்களுக்கு கட்சியினர் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர். இதனையடுத்து முதல்வர் அவர்கள் பாளையங்கோட்டை டக்ரம்மாள் புரத்தில் கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம் நடத்தும் கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொள்கிறார்.

முதலமைச்சர் அவர்கள் மறுநாள் 21-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்து பார்வையிடுகிறார்கள். தொடர்ந்து அரசு மருத்துவக் கல்லூரி பல்நோக்கு மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 72.10 கோடி மதிப்பீட்டில் இதயம், நரம்பியல், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் சிகிச்சைகளுக்கான மேம்பாட்டு மருத்துவமனை கட்டிடத்தையும் திறந்து வைத்து விழா மேடைக்கு வரும் முதலமைச்சர் அவர்கள் விழாவில் 538.48 கோடி ரூபாய் மதிப்பில் புதிய திட்டப்பணிகள், முடிவுற்ற பணிகளைத் துவக்கி வைக்கிறார்கள்.

தொடர்ந்து அரசு விழாவில் 44,924 பயனாளிகளுக்கு 100 கோடியே 95 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி 50க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்து விழா பேருரையாற்றுகிறார்கள். மேலும் உழவர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை சார்பாகவும் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கபடுகிறது. விழாவில் 50,000 பேர்கள் பங்கேற்கும் வகையில் மேடை பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது.

மாநகரப் பகுதிகளில் புதிய சாலை அமைப்பதற்கான நிதி முதலமைச்சர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. வந்தவுடன் சாலைகள் அமைக்கப்படும். மழை காலங்கள் முடிந்துவிட்டது. இன்னும் ஒரு சில நாட்களில் சாலை அமைக்கும் பணி தொடங்கும். பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நெல்லை மாநகர பகுதிகளில் நடந்து வருகிறது. வீட்டு இணைப்பு கொடுக்கும் பணியும் நடந்து வருகிறது. அதன் காரணமாக சாலைகள் புதிதாக அமைக்கப்படாமல் பேட்ச் ஒர்க் நடந்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு கூறினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், சித்திக், பேச்சிபாண்டியன், ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னாள் மேயர் சரவணன், பரமசிவ அய்யப்பன், மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன், சுரேஷ்,கிரிஜா குமார், மாநகர பொறுப்பாளர்கள் மேற்கு சு. சுப்பிரமணியன், கிழக்கு தினேஷ், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்தியானந்த், ஒன்றிய செயலாளர்கள் போர்வெல் கணேசன், செல்வ கருணாநிதி, அலெக்ஸ் அப்பாவு, சுபாஷ் தங்கபாண்டியன், அன்பழகன், வேலங்குளம் கண்ணன், நகர செயலாளர் கணேசன், பகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் சங்கர். அண்டன் செல்லதுரை, அணி அமைப்பாளர்கள் பிரேம் ஆனந்த், ராஜா சங்கரலிங்கம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் இளைஞரணி மீரான்மைதீன், வேல்முருகன் உள்பட கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

---

## மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டியில் —

# வெற்றி பெற்ற 31 விவசாயிகளுக்கு பரிசுத் தொகை - சான்றிதழ்கள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழங்கினார்!

சென்னை, டிச.17-

மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்ற 31 விவசாயிகள் மற்றும் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது போட்டிகளில் வெற்றி பெற்ற மூன்று விவசாயிகளுக்கு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விருதுகள் வழங்கினார்.

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவை அடைவதை உறுதி செய்திடவும். தமிழக விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கத்துடனும் தமிழக விவசாயிகளுக்கான தனி நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்து பல்வேறு சிறப்புத் திட்டங்களை தமிழ்நாடு அரசு சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கம், விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்புகள், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், பயிர் காப்பிட்டுத் திட்டம், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதற்கான சிறப்புத் திட்டங்கள் சிறுதானிய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் எண்ணெய் வித்துக்களுக்கான சிறப்பு திட்டங்கள் முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளுக்கு இடையில் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தொடர் மற்றும் சீரிய முயற்சிகளின் காரணமாக இருபோக சாகுபடிப் பரப்பு மற்றும் பாசன வசதி பெறும் பரப்பானது கணிசமாக உயர்ந்து வருவதுடன் புதிய தொழில்நுட்பங்கள் வாயிலாக மகசூலும் அதிகரித்து வருகிறது.

உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்கள் மட்டுமல்லாது விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பயிர் விளைச்சல் போட்டிகள் வாயிலாக அதிக விளைச்சலுக்கான விருதுகள், ‘நம்மாழ்வார்’ விருதுகள், திருந்திய நெல் சாகுபடிக்கான சி.நாராயணசாமி நாயுடு விருது போன்ற பல்வேறு விருதுகளை தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு வழங்கி கௌரவித்து வருகிறது.

2024-25-ஆம் ஆண்டில் கேழ்வரகு பயிரில் முதல் பரிசு பெற்ற திருமதி.க. தங்கமணி. தெத்திகிரிப்பட்டி. சேலம் மாவட்டம் அவர்களால் அவர்களுக்கும். நிலக்கடலை பயிரில் முதல் பரிசு பெற்ற த.சுதாகர், நத்தாநல்லூர் கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கும் முதலமைச்சர் அவர்களால் நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற வேளாண் வணிக திருவிழாவில் வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 2024-25-ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, குதிரைவாலி, துவரை, உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை, எள், கரும்பு ஆகிய பயிர்களில் அதிக விளைச்சல் பெற்ற 31 விவசாயிகள் மற்றும் பாரம்பரிய நெல் இரகங்களில் அதிக விளைச்சல் பெற்ற 3 விவசாயிகளுக்கு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் இன்றைய தினம் விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.



வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று (16.12.2025) தலைமைச் செயலகத்தில், 2024–2025ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டி வெற்றியாளர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்வில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, , வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி. குமரவேல்பாண்டியன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர்.முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு பயிரிலும் அதிக விளைச்சல் பெற்ற முதல் மூன்று விவசாயிகளுக்கு முதல் பரிசாக ரூ.2.50 இலட்சம் ரூபாய் இரண்டாம் பரிசாக 1.50 இலட்சம் ரூபாய் மற்றும் மூன்றாம் பரிசாக 1.00 இலட்சம் ரூபாய் என மொத்தம் 34 விவசாயிகளுக்கு ரூ.55 இலட்சம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர் வ.தட்சிணாமூர்த்தி, ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை க. ஆபிரகாம், இயக்குநர், வேளாண்மைத்துறை பா. முருகேஷ், இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை குமாரவேல் பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு குறைந்தபட்ச

# ஆதரவு விலை கிடைப்பதற்கு ஒன்றிய அரசு கொண்டுவந்த திட்டங்கள் - எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## நாடாளுமன்றத்தில் — தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, டிச.17-

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைப்பதற்காக ஒன்றிய அரசு கொண்டுவந்த திட்டங்கள் என்ன என்றும் 2025-26-ஆம் ஆண்டுக்கான குருவை நெல் கொள்முதலில் முன் கூட்டிய மதிப்பீடு மற்றும் கூடுதலாக இருப்பு வைத்திருக்கும் நெல்லின் அளவு? என்ன என்றும் ஒன்றிய அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகத்துக்கு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் திமுக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.



அதன் விவரங்கள் வருமாறு:

(அ) 2025-26-ஆம் ஆண்டுக்கான குருவை நெல் கொள்முதலில் முன் கூட்டிய மதிப்பீடு என்ன? கூடுதலாக இருப்பு வைத்திருக்கும் நெல்லின் அளவு? எதிர்பார்க்கப்படும் கொள்முதல் தேவை? பொது விநியோக திட்ட சேமிப்பு கிடங்குகளில் ஏற்படும் கூடுதல் சுமையின் விவரங்கள் என்ன?

(ஆ) அனைத்து மாநிலங்களிலும், போக்குவரத்து தடைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நியாயமான மற்றும் சரியான நேரத்தில் கொள்முதல் மற்றும் குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) கிடைப்பதற்காக போடப்பட்ட திட்டங்கள் மற்றும் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

(இ) நெல் உற்பத்தி அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு, அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள், வீணாகுதல் மற்றும் கெட்டுப்போதலைத் தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் குளிரூட்டப்பட்ட சேமிப்பு கிடங்குகளில் தானிய சேமிப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

(ஈ) பயறுவகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை சமாளிக்க ஒரே மாதிரி பயிர் வேளாண் சாகுபடி முறையை (monoculture) குறைக்க திட்டம் ஏதும் உள்ளதா?

(உ) நெல் உற்பத்தி அதிகரிப்பை கருத்தில் கொண்டு, நெல் சாகுபடியில் நீடித்த நீர் மேலாண்மை மற்றும் பருவ நிலை மாற்றத்தை சமாளிக்க எடுத்துள்ள நடவடிக்கை மற்றும் நடைமுறைகளை அரசு எவ்வாறு உறுதி செய்கிறது? அதிகரித்துள்ள நீர்ப்பாசன தேவைகளுக்கேற்ப நிலத்தடி நீரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

இவ்வாறு தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

---



சென்னை மண்டலத்திற்குட்பட்ட சென்னை வடகிழக்கு மற்றும் சென்னை வடக்கு மாவட்டங்களின் மாவட்ட கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதிச் செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. உரையாற்றினார். இதில் SIR, என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி உள்ளிட்ட பல்வேறு கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.



பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் நேற்று (16.12.2025) சென்னை, நந்தனம் ஆவின் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியதின் ஊழியர்கள் மற்றும் ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், பால்வளத்துறை இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ச.கவிதா, வங்கி அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.